# பலிபீடம் (சிலுவை) எல்லாவற்றையும் ஆளுகைசெய்கிறது

Translated from the book, “The Persistent Purpose of God”

By *T.Austin-Sparks*

எசேக்கியேல் 43:13-27இல், நாம் பெரிய பலிபீடத்தையும், அதின் சேவையையும் பார்க்கிறோம். நாம் அந்த முழுப் பகுதியையும் வாசிக்கப்போவதில்லை; அந்தப் பகுதியின் முதல் வசனத்தை மட்டும் நாம் வாசிப்போம்: “முழங்களின்படி அளக்கும் பலிபீடத்தின் அளவுகளாவன: ஒரு கை முழமும் நாலு விரற் கடையும் கொண்டது ஒரு முழமாகும்; அதின்படி சுற்றாதாரம், ஒரு முழ உயரமும், ஒரு முழ அகலமும், அதின் ஓரத்தைச் சுற்றிலுமுள்ள விளிம்பு ஒரு ஜாணுமாயிருக்கும்; இது பலிபீடத்தின் மேற்புரம்.” அதன் பின் அளவுகளையும், ஊழியத்தையும்பற்றி இன்னும் அதிகமான விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பழைய ஏற்பாட்டில் பலிபீடம் எப்போதுமே சிலுவைக்கு ஓர் அடையாளம் என்பதை நாமெல்லாரும் புரிந்துகொள்ளுகிறோம். இந்தப் பலிபீடம்தான் சர்வாங்க தகனபலி செலுத்தும் இடமாகும். இது எபிரேயர் 10ஆம் அதிகாரத்துக்கு ஒத்திருக்கிறது; எபிரேயர் 10ஆம் அதிகாரத்தில், கர்த்தராகிய இயேசு சர்வாங்க தகனபலிக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறார். எனவே, இன்று காலையில் நாம் சிலுவையின் மையத் தன்மையையும், உலகளாவியதன்மையையும்பற்றிப் பார்க்கப்போகிறோம்.

ஆலயம் சதுரமாக இருந்தது என்று நாம் பார்க்கிறோம். ஒவ்வொரு மூலையிலிருந்தும் நாம் மூலை விட்டக் கோடுகளை வரைந்தால், அந்தக் கோடுகள் பெரிய பலிபீடம் இருக்கிற இடத்தில் சந்திக்கின்றன. அந்த முழுப் பகுதியிலும் பலிபீடம்தான் மைய இடமாகும். இது வனாந்தரத்தில் இருந்த ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து வித்தியாசமானது என்பதை நீங்கள் உணர்ந்துகொள்ளுவீர்கள். ஆசரிப்புக்கூடாரத் தின் வெளிப்பிரகாரம் சதுரமாக இருக்கவில்லை; அங்கு தகன பலிபீடம் வாசலருகே இருந்தது; ஆனால், இங்கு இந்த ஆலயத்தில், பலிபீடம் சரியாக சதுரத்தின் மையத்தில் இருக்கிறது. நாம் இந்த வித்தியாசத் தைப் பார்க்க வேண்டும். இது முக்கியம். எல்லாக் கோடுகளும் பலிபீடத்தில் சந்திக்கின்றன. எல்லாக் கோடுகளும் பலிபீடத்திலிருந்து புறம்பட்டுச் செல்கின்றன. பலிபீடமே எல்லாவற்றின் மைய இடமாகும்.

பலிபீடம் எல்லாவற்றையும் ஆளுகைசெய்தது. வீட்டைப் பொறுத்தவரை பலிபீடமே எல்லாவற்றையும் ஆளுகைசெய்தது; அதாவது உண்மையில், ஆலயத்தில் இருந்தவைகளெல்லாம் பலிபீடத் தால் ஆளுகை செய்யப்பட்டன. வீட்டைச் சுற்றியிருந்த எல்லாவற்றையும் பலிபீடம் ஆளுகைசெய்தது. பல்வேறு வரிசை முறைகளையும், முழுப் பகுதியையும்பற்றிய விவரங்கள் உட்பட, இந்த முழு வீட்டைப்பற்றிய ஒரு வரைபடம் உங்களிடம் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். ஆசாரியர்களின் அறைவீடு களும், பலிகள் தயாரிக்கப்பட்ட இடங்களும் சுற்றிலும் இருந்தனவென்று அப்போது நாம் பார்ப்போம். எல்லாமே வீட்டைச்சுற்றி இருந்தன; ஆனால் வீட்டிலும், முழுப் பகுதியிலும் எல்லாம் பலிபீடத்தால்தான் ஆளுகைசெய்யப்பட்டன.

மேலும், வீட்டின் எல்லா ஊழியமும் பலிபீடத்தால் ஆளுகைசெய்யப்பட்டது. பலிபீடத்தோடு தொடர் பில்லாத எந்த ஊழியமும் அங்கு இருக்கவில்லை என்று நாம் சொல்ல முடியும். பிறகு வீட்டைத் தாண்டியும், அருகிலுள்ள பகுதியைத் தாண்டியும், தேசம் முழுவதும் எல்லாம் பலிபீடத்தால்தான் ஆளுகைசெய்யப்பட்டன. தேசமெங்கும் பாய்ந்தோடுகிற நதி பலிபீடத்தின்வழியாய் ஓடுகிறது; இதைப் பார்க்கும்போது எல்லாம் பலிபீடத்தால்தான் ஆளுகைசெய்யப்படுகின்றன என்பதை நாம் பார்ப்போம். ஆனால், அதற்குமுன் முதலாவது நாம் வீட்டுக்குள் பார்ப்போம்.

### சிலுவை அதற்குரிய இடத்தில்

இங்கு நாம் மிக முக்கியமான, இன்றியமையாத ஒரு சத்தியத்தைப் பார்க்கிறோம். சிலுவை அதின் நிறை வான அளவோடு அதற்குரிய இடத்தில் இருக்கும்போது, மற்ற எல்லாமே ஒழுங்காக இருக்கும்; மற்ற எல்லாமே அதினதின் அர்த்தத்தையும், அதினதின் மதிப்பையும் பெறும். இதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். நாம் பெரும்பாலும் வெளியே இருக்கும் காரியங்களைப்பற்றி, கர்த்தருடைய வீட்டின் ஒழுங்கைப்பற்றி, கர்த்தருடைய வீட்டின் ஊழியத்தைப்பற்றி, கர்த்தருடைய வீட்டோடு தொடர்புடைய மக்களைம்பற்றி அக்கறைம்படுகிறோம். நாம் எப்போதும் வெளியேதான் ஆரம்பிக்கிறோம். நாம் தேவ னுடைய வீட்டின் ஒழுங்கை நிறுவ முயற்சிசெய்கிறோம். நாம் தேவனுடைய வீட்டின் மக்களை சரியாக

வைக்க முயற்சிசெய்கிறோம். நாம் ஊழியர்களைக்குறித்தும், ஊழியங்களைக்குறித்தும் அதிகமாக அக்கறைம்படுகிறோம். ஆனால், சிலுவை அதின் முழு பரிமாணங்களுடன் உண்மையாகவே அதற் குரிய இடத்தில் இருந்தால், மேற்சொன்ன காரியங்களெல்லாம் தானாகவே சரியாகிவிடும். சிலுவை அதற்குரிய இடத்தில் இருந்தால், மக்கள் சரியாக இருப்பார்கள். சிலுவை அதற்குரிய இடத்தில் இருந் தால், ஊழியங்கள் ஜீவனுள்ளவைகளாக இருக்கும். சிலுவை அதற்குரிய இடத்தில் இருந்தால், தேவ னுடைய வீட்டின் ஒழுங்கு சரியாக இருக்கும். இது இயல்பாகவே இப்படித்தான் வேலைசெய்கிறது. **சிலுவை** அதின் முழு நிறைவோடு **மையத்தில் இருந்தால், மற்றவையெல்லாம் அதினதின் இடத்தில் சரியாக இருக்கும், அவை ஜீவிக்கும் உறவுக்குள் வரும்**. அது ஒரு பெரிய பலிபீடம் என்பதைக் கவனியுங்கள்.

இந்தப் பலிபீடம் வெண்கலத்தால் செய்யப்பட்டது என்று இங்கு சொல்லப்படவில்லை; ஆயினும், இது வெண்கல பலிபீடம் என்று நாம் முடிவுசெய்வது சரிதான் என்று நான் நினைக்கிறேன். ஆசரிப்புக்கூடா ரத்தில் இருந்த பலிபீடம் வெண்கலத்தால் செய்யப்பட்டது. சாலொமோன் கட்டிய தேவாலயத் தில் இருந்த பலிபீடமும் வெண்கலத்தால் செய்யப்பட்டது. எனவே, இந்தப் பலிபீடமும் வெண்கலத் தால்தான் செய்யப்பட்டது என்று நாம் கருதலாம் என்று நான் நினைக்கிறேன். நாம் ஏற்கெனவே வெண் கலத்தைச் சந்தித்திருக்கிறோம். நாம் வாசலில் இருக்கும் **மனிதனில்** வெண்கலத்தைச் சந்தித்திருக் கிறோம். அவர் தம் அளவுகோலைக்கொண்டு தாம் என்னவாக இருக்கிறாரோ அதின்படி எல்லாவற்றை யும் அளந்தார். வெண்கலம் தேவனுடைய நீதியுள்ள நியாயத்தீர்ப்புகளுக்கு அடையாளம். இந்தப் பெரிய பலிபீடம் தேவனுடைய நீதியுள்ள நியாயத்தீர்ப்புகளின் நிறைவுக்கு அடையாளமாக இருக்கிறது. இந்த வெண்கல பலிபீடம் வெண்கல **மனிதனால்** அளக்கம்படுகிறது; எனவே, இந்தப் பலிபீடம் நியாயத் தீர்ப்பில் தேவனுடைய எண்ணங்களுக்கு அடையாளமாயிருக்கிறது.

சர்வாங்க தகனபலி செலுத்தும் இந்தப் பலிபீடத்தில், அநீதியுள்ள மனிதன் முற்றிலும் அகற்றம்படு கிறான். அந்த வெண்கல பலிபீடம் ஒரு மனிதனை சாம்பலாக்கிவிடுகிறது. சாம்பல் இந்தப் பலிபீடத்தி லிருந்து எடுக்கப்பட்டு பலிபீடத்தின் அருகில் தரையில் கொட்டப்பட்டது. அதுதான் அநீதியுள்ள மனி தனைப்பற்றிய அல்லது ஜென்மசுபாவமான மனிதனைப்பற்றிய தேவனுடைய எண்ணமாகும். அவன் தேவனுடைய நியாயத்தீர்ப்பு என்னும் அக்கினியில் சுட்டெரிக்கம்படுகிறான்; அவன் சாம்பலாக்கப்படுகிறான்; அவன் தரையில் ஊற்றம்படுகிறான். **அதுதான் ஜென்மசுபாவமான மனிதனைப்பற்றிய தேவனுடைய எண்ணம்**. இன்னொரு பக்கத்தில், **ந்தியுள்ள மனிதனால்** மட்டுமே இங்கு இந்தப் பலிபீடத்தின் பிர சன்னத்தில் நிற்க முடியும். அவைகள் **கர்த்தராகிய இயேசுவின் நபர் மற்றும் வேலையின்** இரம் டு பக் கங்களாகும். ஒரு பக்கம், அவர் நமக்காகப் பாவமாக்கப்பட்டார்; அந்த நிலைமையில் அவர் முழுவதும் சுட்டெரிக்கப்பட்டு, சாம்பலாக்கப்பட்டார். *“என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?”* என்று அவர் கதறியபோது—இது சாம்பலின் கதறல்! அவர் சாம்பலாக்கப்பட்டு, தரையில் ஊற்றப்பட்டார்.

ஆனால், அங்கு சிலுவையின் அடுத்த பக்கம் இருந்தது—“அவர் பாவம் அறியவில்லை.” அவரில் எந்த அநீதியும் இருக்கவில்லை. ஆகையால், அவரால் பலிபீடத்தினூடாய்ப் போக முடியும்; அக்கினியி னூடாய்ப் போனபிறகும், அவரால் வாழ முடியும்! *“உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காண வொட் டீர்.”* அவரில் பாவம் இல்லாததால், மரணத்தால் அவரைப் பிடித்துவைத்துக்கொள்ள முடியவில்லை. அவருடைய பரிசுத்த சுபாவத்தால் தேவனுடைய நீதியுள்ள எல்லா நியாயத்தீர்ப்புகளையும் ஜெயங் கொள்ள முடிந்தது! இதுவே பலிபீடத்தின் பொருள்: ஒரு மனிதன் முடிவுக்குக்கொண்டுவரப்படுகிறான்; **இன்னொரு மனிதன்** அவனுடைய இடத்தில் நிற்கிறான். எல்லாம் பலிபீடத்தில் நியாயந்தீர்க்கம்பட்டு விட்டன. எல்லாம் சிலுவையில் நியாயந்தீர்க்கப்பட்டுவிட்டன.

நாம் கர்த்தராகிய இயேசுவின் சிலுவையில் நியாயந்தீர்க்கப்பட்டுவிட்டோம்; நாம் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டுவிட்டோம். ஜென்பசுபாவத்துக்குரிய எல்லாம் கர்த்தராகிய இயேசுவின் சிலுவையில் நியாயந் தீர்க்கப்பட்டு, முடிவுக்குக்கொண்டுவரப்பட்டுவிட்டது. இதை உணர்ந்துகொள்ளவேண்டியது மிக முக்கி யம். இதனால், எதுவும் சாத்தியமாகிவிடும். எனவேதான், சிலுவை அதற்குரிய இடத்தில் இருந் தால் எல்லாம் சரியாக இருக்கும் என்று நான் சொன்னேன். தேவனுடைய வீடு சரியாக இருக்கும்; அதாவது சபை சரியாக இருக்கும். ஊழியம் சரியாக இருக்கும். ஒழுங்கு சரியாக இருக்கும். சரியான ஒழுங்கை உருவாக்க உழைக்கவோ, முயற்சிசெய்யவோ தேவையில்லை. சிலுவை வேலைசெய்வதின் விளைவாக அது தானாகவே உருவாகிறது.

இதை உங்கள் மனங்களில் நீங்கள் எழுதிக்கொண்டிருக்கிறீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். தேவனுடைய வீட்டில் நீங்கள் ஒழுங்கீனத்தைப் பார்க்கக்கூடும். தேவனுடைய வீட்டில் நீங்கள் ஜென்ம சுபாவமான மனிதனைப் பார்க்கக்கூடும். தேவனுடைய வீட்டில் நீங்கள் தவறான நிலைமைகளைப் பார்க்கக்கூடும். நீங்கள் இவைகளோடு எப்படி இடைப்படப் போகிறீர்கள்? சிலுவையின் கோட்பாட்டினால் மட்டுமே உங்களால் அவைகளோடு இடைப்பட முடியும். உங்களால் மக்களோடு இடைப்பட முடியாது. உங்களால் காரியங்களோடு இடைப்பட முடியாது. அந்தச் சூழ்நிலைக்குள் உங்களால் சிலுவையைக் கொண்டுவர முடிந்தால் மட்டுமே, பிரச்சினையைத் தீர்க்கமுடியும். அந்தச் சூழ் நிலைக்குள் நீங்கள் சிலுவையைக் கொண்டுவந்துவிட்டால், நீங்கள் முழுப் பிரச்சினையையும் தீர்த்து விட்டீர்கள் என்று பொருள். இது அப்படித்தான். நாம் வெளியேயிருந்து தொடங்குவதில்லை. நாம் மக்களிடத்தில் தொடங்குவதில்லை. நாம் தேவனுடைய வீட்டின் ஒழுங்கில் தொடங்குவதில்லை. நாம் ஊழியத்தில் தொடங்குவதில்லை—**நாம் சிலுவையில் தொடங்குகிறோம்.** மக்கள் சிலுவையைப் பார்க்கும்போது மட்டுமே மற்றவையெல்லாம் அதினதின் இடத்தில் சரியாக இருக்கும். எல்லாம் சிலுவையினால் நியாயந்தீர்க்கப்படுகிறது.

ரோமருக்கு எழுதிய நிருபம் சிலுவையின் செய்தியை முழு அளவில் வழங்குகிறது. ரோமருக்கு எழுதிய அந்த நிருபத்தில் நீங்கள் சிலுவையின் மாபெரும் அளவைப் பார்க்கிறீர்கள். அங்கு சிலுவை எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது. அது ஆதாமுக்குள்ளான முழு இனத்தையும் ஒரு முடிவுக்குக் கொம் டுவருகிறது; அது உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்குள் முற்றிலும் ஒரு புதிய இனத்தை உருவாக்குகிறது. புதிய ஏற்பாட்டு நிருபங்களின் முதல் நிருபம் சிலுவையை அதின் முழு அளவில் காண்பிக்கிறது; இது நம் ஆழ்ந்த கவனத்துக்குரியது! ரோமருக்கு எழுதிய நிருபம் பவுல் எழுதிய முதல் நிருபம் இல்லை என்று உங்களெல்லாருக்கும் தெரியும். ஆனால், புதிய ஏற்பாட்டு நிருபங்களை வரிசைப்படுத்தும்போது பரிசுத்த ஆவியானவர் ரோமருக்கு எழுதிய நிருபத்தை முதல் நிருபமாக வைத்திருக்கிறார். புதிய ஏற்பாட்டில் புத்தகங்களை வரிசைப்படுத்துவதில் பரிசுத்த ஆவியானவர் வேலைசெய்திருக்கிறார் என்று நான் நினைக்கிறேன். அவர் தம் இறையாண்மையின்படி ரோமருக்கு எழுதிய நிருபத்தை முதல் நிருபமாக வைத்ததில், அவர் சிலுவையை அதின் முழு அளவில் ஆரம்பத்திலேயே வைத்துவிட்டார். இதைப் பார்ப்பதற்கு ரோமருக்கு எழுதிய நிருபத்தைப் பற்றி உங்களுக்குத் தெரிந்த எல்லாவற்றையும் நீங்கள் நினைத்துப்பார்க்க வேண்டும்.

கொரிந்தியருக்கு எழுதிய முதல் நிருபத்தில், சபைக்குள் இருக்கும் ஜென்பசுபாவமான மனிதனுக்கும், மாம்சப்பிரகாரமான மனிதனுக்கும் சிலுவை பிரயோகிக்கப்படுகிறது. ஜென்மசுபாவமான மனிதனுக்கும், மாம்சப்பிரகாரமான மனிதனுக்கும் சபைக்குள் இருக்க எந்த உரிமையும் இல்லை; ஆனால், அவர்கள் உள்ளே வந்துவிட்டார்கள். அநீதியுள்ள இந்த மனிதன் வாசல்வழியாக உள்ளே நுழைந்து விட்டான். எனவே, **ஜென்மசுபாவமான மனிதனுக்கும், மாம்சப்பிரகாரமான மனிதனுக்கும் எதிராக** அம்போஸ்தலனாகிய பவுல் **சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைக் கொண்டுவருகிறார்.** ரோமர் நிருபத்தில் சிலுவை சபைக்கு வெளியே இருக்கும் அந்த மனிதனோடு இடைப்படுகிறதைப் பார்க்கிறோம்; ஆனால், 1 கொரிந்தியரில், சிலுவை சபைக்குள் இருக்கும் அந்த மனிதனோடு இடைப்படுகிறது.

கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாவது நிருபம் ஊழியத்தைப் பொறுத்தவரை சிலுவையின் பொருளைக் காண்பிக்கிறது. உடைக்கப்பட்ட, தாழ்மையான பாத்திரத்திலிருந்து ஊழியம் பாய்ந்தோடுகிறது என்று அந்த நிருபம் நமக்குக் காண்பிக்கிறது. இந்தக் காரியங்களை மட்டுமே என்னால் சொல்ல முடியும்; அதன் முழு விளக்கத்தையும் நான் விட்டுவிடுகிறேன்.

கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில், சிலுவை கிறிஸ்தவத்தை சட்டரீதியான இன்னொரு அமைப்பு முறையாக மாற்றுவதற்கு எதிராகவும், கிறிஸ்தவர்களை அடிமைத்தனத்துக்குள் கொண்டுவருதற்கு எதிராகவும் கொண்டுவரப்படுகிறது. அந்த நிருபத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் எவ்வளவு பலமாக எழுதுகிறார்! ஆனால், அவர் சிலுவையை எப்படிப் பயன்படுத்துகிறார் என்று பாருங்கள். கிறிஸ்தவத்தை ஒரு சட்டரீதியான அமைப்புமுறையாக மாற்றவும், விசுவாசிகளை மீண்டும் அடிமைத்தனத்துக்குள் கொண்டுவரவும் அவர்கள் செய்த முயற்சிக்கு விரோதமாக அவர் சிலுவையைப் பலமாகப் பயன்படுத்துகிறார்.

எபேசியருக்கு எழுதிய நிருபத்தில், சிலுவையின் வேலை சபையைப் பரலோகத்துக்குரிய தளத்தில் வைப்பதற்காக. எபேசியர் நிருபத்தில், சிலுவை சபையைப் பூமிக்குரிய தளத்திலிருந்து முற்றிலும் துண்டித்துவிடுகிறது. அது சபையைக் காலத்துக்கு வெளியே வைக்கிறது. அது சபையை உலகத்துக்கு வெளியே வைக்கிறது.

பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில், சிலுவை கர்த்தருடைய மக்களின் இசைவைக் கெடுக்கிற காரியத்துக்குப் பிரயோகிக்கப்படுகிறது. அங்கு சபைக்குள்ளே வேதனையான ஓர் இசைவுக்கேடு இருக்கிறது. காரியங்கள் சந்தோஷமாக இல்லை என்று சொல்லக்கூடிய ஓர் இடம் அங்கு இருக்கிறது. தனிப்பட்ட சொந்த நலனும், பெருமையுமே அதற்குக் காரணம். சிலர் தங்களுடைய தனிப்பட்ட சொந்த நலனை விட்டுவிட விரும்பவில்லை. வேறு சிலர் தங்களுடைய பெருமையை விட்டுவிட விரும்பவில்லை. சிலர் புண்படுத்தப்பட்டிருந்தார்கள்; அவர்கள் மன்னிக்க விரும்பவில்லை. எனவே, இந்தப் பிணக்குக்கும், இசைவுக்கேட்டுக்கும் எதிராக அப்போஸ்தலனாகிய பவுல் சிலுவையைக் கொம் டுவருகிறார். அவர்களுடைய வாழ்க்கையில் சிலுவை இருந்தால் மட்டுமே, எல்லாம் சரியாக இருக்கும் என்று அவர் சுட்டிக்காட்டுகிறார்.

அடுத்தது கொலோசெயருக்கு எழுதிய நிருபம். பொய்யான ஆவிக்குரியதன்மை எல்லாவற்றிலுருந்தும் சிலுவை விடுவிக்கிறது என்று இந்த நிருபம் காண்பிக்கிறது. வெறுமனே சந்நியாசமதத்திற்குரிய (Mysticism) எல்லாவற்றையும், கிறிஸ்துவை அவர் என்னவாக இருக்கிறாரோ அதைவிடக் குறைவாக மாற்றுகிற எல்லாவற்றையும், சிலுவை ஒதுக்கித்தள்ளிவிடுகிறது.

பின்பு, தெசலோனிக்கேயர்களுக்கு எழுதிய நிருபங்கள் இருக்கின்றன. இங்கு சிலுவை பாடநுபவிம்பதற்கான பலமாக—கர்த்தருடைய வருகைக்கான ஏவுதலாக—காண்பிக்கப்பட்டிருக்கிறது. உண்மையில், இங்கு சிலுவையைப்பற்றி அதிகமாகச் சொல்லப்படாமல் இருக்கலாம். ஆனால், சிலுவையின் கோட்பாடுதான் இந்த நிருபங்களின் கோட்பாடாகும். மக்கள் கிறிஸ்துவினிமித்தம் பாடநுபவித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லாவற்றையும் இழந்துகொண்டிருந்தார்கள். தங்களை விடுவிக்கக் கர்த்தர் சீக்கிரம் வந்திருக்க வேண்டும் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால், கர்த்தருடைய வருகையோ தாமதமாகிக்கொண்டிருந்தது. அவர்கள் பாடநுபவிப்பதின் விளைவாகக் கர்த்தர் சீக்கிரம் வருவார் என்றும், அதனால் அவர்கள் மகிமைப்படுவார்கள் என்றும் அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களுக்குக் கூறுகிறார். கிறிஸ்துவுடனேகூட பாடநுபவிக்கிற பாடுகள். அவர்கள் கிறிஸ்துவினிமித்தம் பாடநுபவித்துக்கொண்டிருந்தார்கள். இது சிலுவையில் ஐக்கியம்கொள்ளுதல். ஆனால், பாடுகளின் விளைவாக மகிமை ஏற்பட்டது. கர்த்தர் வருகிறார்; அப்போது எல்லாம் சரியாகிவிடும். பாடநுபவித்துக்கொண்டிருக்கும் விசுவாசிகளுக்கு சிலுவை மிகவும் நிஜமான ஒரு செய்தியைக் கூறுகிறது. இதற்குப்பின், எபிரேயருக்கு எழுதிய நிருபத்தோடு நாம் முடித்துக்கொள்வோம்.

எபிரேயருக்கு எழுதிய நிருபத்தில், எல்லாம் நிறைவுக்கும், அறுதிமுடிவுக்கும் எப்படி கொண்டுவரப்படுகின்றன என்று சிலுவை காண்பிக்கிறது. இவைகளெல்லாம் தேவனுடைய வீட்டின் உட்பகுதியோடு தொடர்புடையவை. இது நடத்தையைத் தொடுகிறது; இது குணத்தைத் தொடுகிறது; இது ஒழுங்கைத் தொடுகிறது; இது ஊழியத்தைத் தொடுகிறது. சிலுவை அதற்குரிய இடத்தில் இருந்தால், எல்லாம் வீரியமுள்ளதாக இருக்கும்.

இப்போது, நான் உங்களுக்கு வேதாகமத்திலிருந்து வெறுமனே சில போதனைகளைத் தரவில்லை. சிலுவையே எல்லாவற்றிற்கும் திறவுகோல். அப்போது, உள்ளே எது உம் மையாக இருக்கிறதோ, அதுவே வெளியேயும் உண்மையாக இருக்கும். சிலுவையே சபையினுடைய செல்வாக்கின் எல்லா அம்சங்களையும் செய்துமுடிக்கிறது. நதி சிலுவையின் பக்கமாய் ஓடுகிறது, அதாவது முழு தேசத்திற்கும் செல்வாக்கு பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறம்பட்டுச் செல்கிறது. சிலுவையே முழு உலகத்திற்கும் செல்கிற ஊழியத்திற்கு வீரியத்தைக் கொடுக்கிறது. எனவே, அப்போஸ்தலன் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவையே எங்கும் பிரசங்கித்தார்.

**சிலுவையே உலகத்துக்கு எதிரான தற்காப்பு**

அதன்பின், நாம் இன்னொரு காரியத்தைக் கவனிக்க வேண்டும்; பலிபீடமே எதிரிக்கு விரோதமான பெரிய தற்காப்பு என்று நாம் பார்க்கிறோம். எஸ்றா 3:3 இவ்வாறு கூறுகிறது: "*அவர்கள் அத்தேசத்தின்*

*ஜனங்களுக்குப் பயந்ததினால், பலிபீடத்தை அதின் ஆதாரங்களின்மேல் ஸ்தாபித்தார்கள்...”* அவர்கள் அத்தேசத்தின் மக்களுக்குப் பயந்ததால், பலிபீடத்தை அதற்குரிய இடத்தில் வைத்தார்கள். சிலுவை ஒரு பெரிய தற்காப்பு—சிலுவை நம்மை உலகத்திலிருந்து பாதுகாக்கிறது. உலகமே சபையின் பெரிய எதிரி. உலகத்தின் ஆவியே எப்போதும் சபையின் பெரிய எதிரியாக இருந்திருக்கிறது. உல கத்தை சபைக்குள் கொண்டுவரவும், அதனால் சபையையும் அதின் ஊழியத்தையும் பாழாக்கவும், உல கத்தில் சபையின் செல்வாக்கை அழிக்கவும் சாத்தான் எப்போதும் முயன்றுகொண்டேயிருக்கிறான். உலகத்தை சபைக்குள் கொண்டுவந்து, உலகத்தில் சபையின் செல்வாக்கை அழிக்க வேண்டும் என் பது எதிரியின் மிகவும் புத்திசாலித்தனமான, தந்திரமான திட்டமாகும். *“நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக்குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டா திருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையும் டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையும் டிருக்கிறேன்,”* (கலா. 6:14) என்று பவுல் கூறினார்.

உண்மையாகவே சிலுவையில் அறையப்பட்ட மக்கள் உலகத்தைப்பற்றி ஒருபோதும் பயப்பட வேண் டிய தேவையில்லை. சிலுவை அதின் வேலையைச் செய்யாமல் இருக்கும்போது மட்டுமே, அங்கு உல கத்திற்கு இடம் இருக்கும். சிலுவையில் அறையப்பட்ட மனிதனிடத்தில் அல்லது மனுஷியினிடத் தில் அல்லது ஒரு கூட்டம் விசுவாசிகளினிடத்தில் உலகத்திற்கு எந்த இடமும் இல்லை. சிலுவை உல கத்திற்கு எதிராக அரண்போன்ற ஒரு பெரிய பாதுகாப்பு. **ம்ங்கள் உலகத்தை வெளியே வைக்க விரும்பினால், சிலுவையை அதற்குரிய இடத்தில் வையுங்கள்**. சிலுவை உண்மையாகவே முழு நிறை வோடு அதற்குரிய இடத்தில் இருந்தால், மற்றவையெல்லாம் ஒழுங்காக இருக்கும். **சிலுவையே** உலகத்திற்கு எதிரான பெரிய தற்காப்பு. **சிலுவையே** பொல்லாத வல்லமைகளுக்கு எதிரான பெரிய தற்காப்பு. **சிலுவை** எல்லாவற்றையும் பாதுகாப்பானதாக மாற்றிவிடுகிறது; அது கர்த்தருக்காக எல்லா வற்றையும் பாதுகாப்பானதாக மாற்றிவிடுகிறது.

கர்த்தர் தம்மைத் தம் மக்களிடம் ஒப்புவிக்க விரும்புகிறார். அவர் தம் மக்களை நம்பித் தம்மை அவர் களிடம் ஒப்படைக்க விரும்புகிறார். ஆனால், அங்கு சிலுவை வேலைசெய்யவில்லையென்றால், கர்த்தர் அவர்களை நம்பித் தம்மை அவர்களிடம் ஒப்படைக்க முடியாது. “என்னை அவர்களிடம் கையளிப்பது பாதுகாப்பானது அல்ல; அப்படிக் கையளித்தால் சிலுவையில் அறையப்படாத அவர்களுடைய நிலைமையிலே நானும் சம்பந்தப்பட வேண்டியிருக்கும்,” என்று கர்த்தர் கூறுகிறார். சிலுவை கர்த்தருக் காக எல்லாவற்றையும் பாதுகாப்பானதாக மாற்றுகிறது. சிலுவை சபைக்காக எல்லாவற்றையும் பாதுகாப்பானதாக மாற்றுகிறது. உண்மையாகவே, சிலுவை நம்மெல்லாரிலும் வேலைசெய்தால், நம்மால் ஒருவரையொருவர் நம்ப முடியும். சிலுவையில் அறையப்பட்ட ஒரு மனிதனை அல்லது ஒரு மனுஷியை நம்பி நீங்கள் உங்களை அவர்களிடம் ஒப்படைப்பது மிகவும் பாதுகாப்பானதாகும்.

சிலுவை போதிக்கப்பட வேண்டிய ஓர் உபதேசம் இல்லை என்பதை வலியுறுத்திக்கூறி நான் இன்று காலையில் முடிக்க விரும்புகிறேன். இது பிரசங்கிக்கப்பட வேண்டிய ஒரு பாடம் இல்லை. நிச்சயமாக இதைப் பிரசங்கிப்பார்கள், போதிப்பார்கள். ஆனால், முதன்முதலாக, இது போதிக்கப்பட வேண்டிய ஒரு பாடம் இல்லை. இது வெறுமனே ஓர் உபதேசம் இல்லை. சிலுவை—இது வல்லமை. சிலுவை— இது ஓர் அனுபவம். சிலுவை—இது நம் வாழ்க்கையில் நடக்கிற ஒரு நிகழ்ச்சி. சிலுவை—இது ஒரு நெருக்கடி. சிலுவை-இது ஒரு புரட்சி. சிலுவை—இது ஒரு பூமியதிர்ச்சி. இயேசு சிலுவையில் அறையம்பட்டபோது, அங்கு பூமியதிர்ச்சி உண்டாயிற்று. சிலுவை நம் வாழ்க்கையில் நுழைந்தால், அங்கு பூமியதிர்ச்சி உண்டாகும். எல்லாம் அசைக்கப்படும், எல்லாம் தலைகீழாக மாறிவிடும். சிலுவை—இது ஒரு பூமி யதிர்ச்சி. இது வியக்கத்தக்க பலமான ஒன்றாகும். சிலுவை—இது வெறுமனே ஒரு தத்துவம் இல்லை, இது வெறுமனே ஓர் உபதேசம் இல்லை. **சிலுவையே எல்லாவற்றையும் ஆளுகைசெய்கிறது.** இதுவே சிலுவையின் மையத்தன்மையையும், உலகளாவியதன்மையையும்பற்றிய எங்கள் செய்தியாகும்.

*கர்த்தாவே, நாங்களெல்லாரும் சிலுவையில் அறையப்பட்ட மனிதர்களாகவும், மனுஷிகளாகவும் இருக்க எங்களுக்கு அருள்வீராக. எங்கள் சபைகள் சிலுவையில் அறையம்பட்ட சபைகளாக இரும்ப தாக. கர்த்தாவே, உம் முழுச் சபையும் சிலுவையின் அர்த்தத்தைக் காணவும், கருதவும் நீர் அருள்வீராக.*